உ

# கூட்டு வழிபாட்டுப் பாமாலை







இந்துமாமன்றம்
ஆசிரியர் கலாசாலை,
கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கூட்டு வழிபாட்டுப் பாமாலை

(பஞ்சதோத்திரமும் நவராத்திரிப் பாமாலையும்)

இந்துமாமன்றம்
ஆசிரியர் கலாசாலை,
கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சதோத்திரமும் நவராத்திரிப் பாமாலையும்

அச்சுப்பதிவு: கணாதிபன் அச்சகம் - கரணவாய்

வெளியீடு:- இந்துமாமன்றம் (ஆசிரியர் கலாசாலை கோப்பாய்)

பக்கங்கள்:- 40

விலை:- 30/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சதோத்திரமும் நவராத்திரி பாமாலையும்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

தோடு டையசெவி யன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடு டையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வ
னேடு டையமல ரான்முனை நாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடு டையபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநானறியே
னேற்றா யடிக்கே யிரவும் பகலும்
பிரியா துவணங் குவனெப் பொழுதுந்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
வாற்றே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
வெத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளத்தாவனக் காளாயினி யல்லேனென லாமே.

## கோளறு திருப்பதிகம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தெ
னுளமேபு குந்தவதனான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
யாசறு நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்குமிகவே.

என்பொடு கொம்பொடாமை யிவைமார்பி லங்க
வெருதேறி யேழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தெ
னுளமேபு குந்தவதனா
லொன்பதோ டொன்றொடேழு பதினெட்டொ டாறு
முடனாயநாள்க ளவைதா
மன்பொடு நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்குமிகவே.

உருவளர் பவளமேனி யொளிநீ றணிந்து
வுமையோடும் வெள்ளைவிடைமேன்
முருகலர் கொன்றைதிங்கண் முடிமே லணிந்தெ
னுளமேபு குந்தவதனாற்
றிருமகள் கலையதூர்தி சயமாது பூமி
திசைதெய்வ மானபலவு
மருநெதி நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்குமிகவே.

மதிநுதன் மங்கையோடு வடபாலி ருந்து
மறையோது மெங்கள்பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல ணிந்தெ
னுளமேவு குந்தவதனாற்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளானபலவும்
அதிகுண நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்குமிகவே.

நசஞ்சணி கண்ட னெந்தை மடவாட னோடு
விடையேறு மெங்கள்பரமன்
றுஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல ணிந்தெ
னுளமேபு குந்தவதனாற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெஞ்சின வவுணரோடு முருமிடியு மின்னு
மிகையான பூதமவையு
மஞ்சிடு நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்குமிகவே.

வாள்வரி யதளதாடை வரிகோவ ணத்தர்
மடவாட னோடுமுடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தெ
னுளமேபு குந்தவதனாற்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடுகரடி
யாளரி நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்குமிகவே.

செப்பிள முலைநன் மங்கை யொருபாக மாக
விடையேறு செல்வனடைவா
ரொப்பிள மதியுமப்பு முடிமே லணிந்தெ
னுளமேபு குந்தவதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்துநலியா
வப்படி நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்குமிகவே.

வேள்பட விழிசெய்தன்று விடைமேலி ருந்து
மடவாட னோடுமுடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தெ
னுளமேபு குந்தவதனா
லேழ்கடல் சூழிலங்கை யரையன் றனோடு
மிடரான வந்துநலியா
வார்கட னல்லநல்ல நல்ல
வடியார வர்க்குமிகவே.

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள்பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல ணிந்தெ
னுளமேபு குந்தவதனான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்மிசை யோனுமாலு மறையோடு
வருகால மானபலவு
மலைகடன் மேருநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்குமிகவே.

கொத்தலர் குழலியோடு விசற்கு நல்கு
குணமாய வேடவிகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமேல ணிந்தெ
னுளமேபு குந்தவதனாற்
புத்தரொ டமனைவாதி லழிவிக்கு மண்ண
றிருநீறு செம்மைதிடமே
யத்தகு நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்குமிகவே.

தேனமர் பொழில்கொளாலை விறைசெந்நெ றுன்னி
வளர்செம்பொ னெங்குநிகழ
நான்முக னாதியாய பிரமபு ரத்து
மறைஞான ஞானமுனிவன்
றானுறு கோளுநாளு மடியாரை வந்து
நலியாத வண்ணமுரைசெய்
யானசொன் மாலையோது மடியார்கள் வானி
லரசாள்வ ராணைநமதே.

## நமச்சிவாயத் திருப்பதிகம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாச்சினு
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
யாவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் ருங்கல நமச்சி வாயவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழ
லுண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே.

இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற்பி ரானென்று வினவு வோமல்லோ
மடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே.

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலா
மந்தெணர்க் கருங்கல மருமறை யாறங்கந்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கல நமச்சி வாயவே.

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கல்லா
னலமில னாடொறு நல்கு வானலன்
குலமில ராகினுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே.

வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்
கூடினா ரந்நெறி கூடச் சென்றலு
மோடினே னோடிச்சென் றுருவங் காண்டலு
நாடினே னாடிற்று நமச்சி வாயவே.

இல்லக விளக்கது விருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
றன்னெறி யேசர ணாத றிண்ணமே
யந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலா
நன்னெறி யாவது நமச்சி வாயவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே.

### திருக்கேதீச்சர பதிகம்

***சுந்தரமூர்த்தி சுவாமிகள்***

நத்தார்படைஞானன் பசுவேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மதயானையுரி போர்த்தமணவாளன்
பத்தாகிய தொண்டர்தொழுபாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக்கேதீச்சரத்தானே.

சுடுவார்பொடி நீறுந்நல்ல துண்டப்பிறைகீளும்
கடமார்களியானை யுரியணிந்தகறைக்கண்டன்
படவேரிடைமடவா ளொடுபாலாவியின் கரைமேல்
திடமாவுறைகின்றான் திருக்கேதீச்சரத்தானே.

அங்கம்மொழியன்னா ரவரமரர்தொழுதேத்த
வங்கம்மலிகின்ற கடன்மாதோட்டநன்னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான் திருக்கேதீச்சரத்தானே.

கரியகறைக்கண்டன் நல்லகண்மேலொருகண்ணான்
வரியசிறைவண்டியாழ் செயுமாதோட்ட நன்னகருள்
பரியதிரையெறியா வருபாலாவியின் கரைமேல்
தெரியுமறைவல்லான் திருக்கேதீச்சரத்தானே.

அங்கத்துறுநோய்களடியார் மேலொழித்தருளி
வங்கமலிகின்ற கடன்மா தோட்டநன்னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சரத்தானே.

வெய்யவினையாயவடியார் மேலொழனித்தருளி
வையமலிகின்ற கடன்மா தோட்டநன்னகரில்
பையேறிடைமடவா ளொடுபாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான் திருக்கேதீச்சரத்தானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனத்துறு நோய்களடியார் மேலொழித்தருளி
வானத்துறுமலியுங் கடன்மாதோட்டநன்னகரில்
பானத்துறுமொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயிறணிந்தான் திருக்கேதீச்சரத்தானே.

அட்டன்னழகாக அரைதன் மேலரவார்த்து
மட்டுண்டுவண்டாலும் பொழின்மா தோட்டநன்னகரில்
பட்டவரிநுதலா ளொடுபாலாவியின் கரைமேல்
கிட்ன்நமையாள் வான்திருக்கேதீச்சரத்தானே.

மூவரெனஇருவரென முக்கண்ணுடைமூர்த்தி
மாவின்கனிதூங்கும் பொழில்மா தோட்டநன்னகரில்
பாவம்வினைய றுப்பார் பயில்பாலாவியின் கரைமேல்
தேவனெனையாள் வான்திருக்கேதீச்சரத்தானே.

கறையார்கடல் சூழ்ந்தகழிமா தோட்டநன்னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத்தானை
மறையார்புகழூரன்னடித் தொண்டனுரைசெய்த
குறையாத்தமிழ்பத்துஞ் சொலக்கூடா கொடுவினையே.

### *திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்*

விருது குன்றமா மேருவில் நாணர
வா அனல் எரியம்பாய்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்(று)
உறைபதி எந்நாளும்
கருது கின்றஊர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை அடையாவே.

பாடல் வீணையர் பலபல சரிதையர்
எருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவர் அமரர்கள் வேண்டநஞ்
சுண்டிருள் கண்டத்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈட மாவது இருங்கடற் கரையினில்
எழில்திகழ் மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக்
கெடுமிடர் வினைதானே.

பெண்ணோர் பாகத்தர் பிறைதவழ் சடையினர்
அறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ணம் ஆதரித் தாடுவர் பாடுவர்
அகந்தொறும் இடுபிச்சைக்(கு)
உண்ண லாவதோர் இச்சையின் உழல்பவர்
உயர்தரு மாதோட்டத்(து)
அண்ணல் நண்ணுகே தீச்சரம் அடைபவர்க்(கு)
அருவினை அடையாமே.

பொடிகொள் மேனியர் புலியதள் அரையினர்
விரிதரு கரத்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர் நூலினர்
மறிகடல் மாதோட்டத்(து)
அடிகள் ஆதரித்(து) அருந்தகே தீச்சரம்
பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேல்
மொய்த்தெழும் வினைபோமே.

நல்லர் ஆற்றவும் ஞானநன்
குடையர்தம் மடைந்தவர்க்(கு) அருளிய
வல்லர் பார்மிசை வான்பிறப்(பு) இறப்பிலர்
மலிகடல் மாதோட்டத்(து)
எல்லை யில்புகழ் எச்தைகே தீச்சரம்
இராப்பகல் நினைந்தேத்தி
அல்லல் ஆசறுத்(து) அரனடி இணைதொழும்
அன்பராம் அடியாரே.

பேழை வார்சடைப் பெருந்திரு மகள்தனை
பொருந்தவைத் தொருபாகம்
மாழை அங்கயற் கண்ணிபால் அருளிய
பொருளினர் குடிவாழ்க்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழை யம்பொழில் மந்திகள் களிப்புற
மருவிய மாதோட்டம்
கேழல் வெண்மருப் பணிந்தநீள் மார்பர்க்கே
தீச்சரம் பிரியாரே.

பண்டு நால்வருக்(கு) அறமுரைத் தருளிப்பல்
லுலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக்
காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழில்மஞ்ஞை
நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாள்தொறும் துதிசெய அருள்செய்கே
தீச்சரம் அதுதானே.

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந்
தெடுத்தவன் முடிதிண்டோள்
தன்ன லங்கெட அடர்த்தவற் கருள்செய்த
தலைவனார் கடல்வாயப்
பொன்னி லங்கெட அடர்த்தவற் கருள்செய்த
பொருந்திய மாதோட்டத்(து)
உன்னி அன்பொடும் அடியவர் இறஞ்சுகே
தீச்சரம் துள்ளாரே.

பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும்
புவியிடந்(து) எழுந்தோடி
மேவி நாடிநின் னடியிணை காண்கிலா
வித்தகம் என்னாகும்
மாவும் பூகமும் கதலியும் நெருங்குமா
தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே தீச்சரத்
திருந்தஎம் பெருமானே.

புத்த ராய்ச்சில புனைதுகில் உடையவர்
புறனுரைச் சமணாதர்
எத்த ராகிநின்(று) உண்பவர் இயம்பிய
ஏழைமை கேளேன்மின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்த யானையை மறுகிட உரிசெய்து
போர்த்தவர் மாதோட்டத்(து)
அத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே
தீச்சரம் அடைமின்னே.

மாடெ லாமண கடலின(து)
ஒலிகவர் மாதோட்டத்(து)
ஆடல் ஏறுடை அண்ணல்கே தீச்சரத்(து)
அடிகளை அணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொல்
னவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின் பக்தர்கள்
பரகதி பெறலாமே.

## திருகோணமாமலைப் பதிகம்

நிரைகழலவஞ்சிலம்பொலியலம்புநிமலர்நீறணிதிருமேனி
வரைகெழுமகளோர்பாகமாப்புணர்ந்தடிவினர் கொடியணிவிடையர்
கரைகெழு சந்துங்காரகிற் பிளவுமளவுமளப்பருங்கனமணிவரன்றிக்
குரைகடலோதநித்திலங்கொழிக்குங் கோணமாமலையமர்ந்தாரே

கடிதெனவந்தகரி தனையுரித்துவவ்வுரிமேனிமேற்போர்ப்பர்
பிடியனநடையாள் பெய்வளைமடந்தை பிறைநுதலவளொடுமுடனாய்க்
கொடிதெனக்கதறுங்குரை கடல்சூழ்ந்து கொள்ளமுனித்திலஞ்சுமந்து
குடிதனைநெருக்கிப் பெருக்கமாய்த்தோன்றுங்கோணமாமலையமர்ந்தாரே

பனித்திளந்திங்கட்பைந்தலைநாகம்படர்சடைமுடியிடைவைத்தார்
கனித்திளந்துவர்வாய்க்காரிகைபாகமாமுன்கலந்தவர்மதின்மேல்
தனித்தபேருருவவிழுத்தழனாகந்தாங்கிய மேருவெஞ்சிலையாக்
குனித்ததோர்வில்லார்க்குரை கடல்சூழ்ந்த கோணமாமலையமர்ந்தாரே

பழித்திளங்கங்கைசடையிடை வைத்துப்பாங்குடைமதனைப்பொடியா
விழித்தவன்றேவி வேண்டமுன்கொடுத்தவிமலனார் கமலமார்பாதர்
தெழித்துமுன்னரற்றுஞ் செம்பொனுமிப்பியுஞ்சுமந்து
கொழித்துவன்றிரைகள்கரையிடைச் சேர்க்குங்கோணமாமலையமர்ந்தாரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிலுநல்லதலைவ ரென்றடியார்தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயிலுமனத்துமருவிநின்ற கலாமாண்பினர்காண்பலவேடர்
நோயிலும்பிணியுந் தொழிலர்பானீங்கி நுழைதருநூலினர்ஞாலம்
கோயிலுஞ் சுனையுங்கடலுடன் சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரே

பரிந்துநன்மனத்தால் வழிபடுமாணிதன்னுயிர் மேல்வருங்கூற்றைத்
திரிந்திடாவண்ணமுதைத்தவற்கருளுஞ்செம்மையார்நம்மையாளுடையார்
விரிந்துயாமெளவன்மாதவி புன்னைவேங்கைவண்செருந்திசெண்பகத்தின்
குருந்தொடுமுல்லை கொடிவிடும்பொழில் சூழ்கோணமாமலையமர்ந்தாரே

எடுத்தவன்றருக்கையிழித்தவர் விரலாலேத்திட வாத்தமாம்பேறு
தொடுத்தவர்செல்வந் தோன்றியபிறப்புமிறப்பறியாதவர்வேள்வி
தடுத்தவர்வனப்பால் வைத்ததோர்கருணைதன்னருட்பெருமையும்வாழ்வும்
கொடுத்தவர்விரும்பும் பெரும்புகழாளர் கோணமாமலையமர்ந்தாரே.

அருவராதொருகை வெண்டலையேந்தியகந் தொறும்பலியுடன்புக்க
பெருவராயுறையுநீர்மையர்சீர்மைப்பெருங் கடல்வண்ணனும்பிரமன்
இருவருமறியாவண்ணமொள்ளெரியா யுயர்ந்தநன்மாற்கும்
குருவராய்நின்றார்குரைகழல்வணங்கக்கோணமாலையமர்ந்தாரே.

நின்றுணுஞ்சமணுமிருந்துணுந்தேருநெறியலாதனபுறங்கூற
வென்றுநஞ்சுண்ணும்பரிசினரொருபான்மெல்லியலொடுமுடனாகித்
துன்றுமொண்பவ்வலுஞ்சூழ்ந்துதாழ்ந்துதிரைபலமோதிக்
குன்றுமொண்கானல்வாசம்வந்துலவுங்கோணமாமலையமர்ந்தாரே.

குற்றமிலாதார்குரைகடல்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரைக்
கற்றுணர்கேள்விக்காழியர்பெருமான்கருத்துடைஞானசம்பந்தன்
உற்றசெந்தமிழார்மாலையீரைந்துமுரைப்பவர்கேட்பவருயர்ந்தோர்
சுற்றமுமாகித்தொதல்வினையடையாரோதன்றுவர்வானிடைப்பொலிந்தே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
விமைப்பொழுது மென்னெஞ்சினீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க
வாகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
வேக னநேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
வீசனடி போற்றி யெந்தை யடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
யாராத வின்ப மருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையு ணின்ற வதனா
லவனரு ளாலே யவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய வுரைப்பணியான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
யெண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்விளங்கொளியா
யெண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றே
னுய்யவென் னுள்ளத்து ளோங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்க
ளையா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
யெய்ஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
யஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
யாக்க மளவிறுதி யில்லா யனைத்துலகு
மாக்குவாய் காப்பா யழிப்பா யருடருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழுப்பி
னாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமா
னிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
யறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கு புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகு
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் மாரியனே
நேச வருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரா வமுதே யளவிலாப் பெம்மானே
யோராதா ருள்ளத் தொளிக்கும் மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
யின்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
யன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
யாதியனே யந்த நடுவாகி யல்லானே
யீர்த்தென்னை யாட்கொண்ட வெந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தி
னோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
யாற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையு
ளூற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
வாற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
யல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

### திருவாசகம்

இன்னெறைக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைத்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று சென்றணுவாய்த்தேய்ந்து தேய்ந்தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே.

பாவநா சாவுன் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே சிவபுரத் தரசே
திருப் பெருந்துறையுறை சிவனே
மூவுல குருவ இருவர்கீழ் மேலாய்
முழுங்கழ லாய்நிமிர்ந் தானே
மாவுரியானே வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே.

## திருவிசைப்பா

முத்தீயாளர் நான்மறையர் மூவாயிர வர்நின்னோடு
ஒத்தேவாழும் தன்மையாளர் ஓதியே நான்மறையைத்
தெத்தேயென்று வண்டு பாடும் தென் தில்லையம்பலத்துள்
அத்தாவுன்றன் ஆடல்காண அணைவதும் என்றுகொலோ.

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ!
அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம்பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய்மண்ட பத்துள்ளேபுகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோனடியோ
முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிட்டையி லாவுடல் நீத்தென்னை
ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்
சீராட்டுந் திறங்களுமே சிந்தித்து
அட்ட மூர்த்திக்கென் அகம்நெக
ஊறும் அமிர்தினுக் காலநிழல்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

**பெரியபுராணம்**

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போது உன் அடியின்
கீழ் இருக்க என்றார்.

உலகெ லாம்முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

**வாழ்த்து**

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

**சிவாய நம ஓம்**

சிவாய நம ஓம் சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் சிவாய நம ஓம்
நமசிவாய சிவாய நம ஓம்
சிவ சிவ சிவ சிவாய நம ஓம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாய சிவாய சிவாய நம ஓம்
அரஹர சிவ சிவ சிவாய நம ஓம்
சிவ சிவ சிவ சிவாய நம ஓம்

**சரணம்**

கலைநிறை கணபதி சரணம் சரணம்
கஜமுக குணபதி சரணம் சரணம்
தலைவநின் இணையடி சரணம் சரணம்
சரணம் பவகுக சரணம் சரணம்
சிலைமலை யுடையவ சரணம் சரணம்
சிவசிவ சிவசிவ சரணம் சரணம்
உலைவரு மொருபரை சரணம் சரணம்
உமைசிவ அம்பிகை சரணம் சரணம்
முடியா முதலே சரணம் சரணம்
முருகா குமரா சரணம் சரணம்
வடிவேல் அரசே சரணம் சரணம்
மயிலூர் மணியே சரணம் சரணம்
அடியார்க் கெளியாய் சரணம் சரணம்
அரியாய் பெரியாய் சரணம் சரணம்
கடியாக் கதியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்.

யாதுமாகி நின்றாய் - காளி
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை யெல்லாம் - நின்றன்
செயல்களன்றி யில்லை
போதுமிங்கு மாந்தர் வாழும்
பொய்மை வாழ்க்கை எல்லாம்
ஆதிசக்தி தாயே - என்மேல்
அருள் புரிந்து காப்பாய்.

எந்த நாளும் நின்மேல் - தாயே
இசைகள் பாடி வாழ்வேன்
கந்தனை பயந்தாய் - தாயே
கருணை வெள்ளமானாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்தமாருதத்தில் - வானில்
மலையினுச்சி மீதில்
சிந்தையெங்கு செல்லும் - அங்குன்
செம்மை தோன்றுமன்றே.

ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி
நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர் மணிப்பூண்
பங்சுக்கு நேர்பல துன்பங்களாம் - இவள்
பார்வைக்கு நேர்பெரும் தீ
வஞ்சனையின்றிப் பகையின்றிச் சூதின்றி
வையக மாந்த ரெல்லாம்
தஞ்சமென்றே யுரைப்பீரவள் பேர்சக்தி
ஓம்சத்தி ஓம்சத்தி ஓம்.

பொன்னைப் பொழிந்திடு மின்னை வளர்த்திடு
போற்றி உனக் கிசைத்தோம்
அன்னை பராசக்தி என்றுரைத்தோம் - தளை
அத்தனையும் களைந்தோம்
சொன்னபடிக்கு நடத்திடுவாய் - மன
மே தொழில் வேறில்லை காண்
இன்னுமதேயுரைப் போம் சக்தி ஓம்சக்தி
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்

வெள்ளை மலர்மிசை வேதக்கருப்பொரு
ஆக விளங்கிடுவாய்
தெள்ளுக்லைத் தமிழ் வாணி நினக்கொரு
விண்ணப்பம் செய்திடுவேன்
எள்அத்தனைப் பொழுதும் பயனின்றி
இராதென்றன் நாவினிலே
வெள்ளமெனப் பொழிவாய் சக்திவேல் சக்தி
வேல்சக்தி வேல்சக்தி வேல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவாய் வருவாய் வருவாயம்மா
திருவே உருவாய் வருவாயம்மா
இருளை நீக்கிட வருவாயம்மா - உந்தன்
அருளைப் பொழிந்திடு தாயே அம்மா. (வருவாய்)

கல்யாணி கருமாரி காமாட்சி நீயே
மகாலஹ்மி மாதங்கி மீனாட்சி நீயே
வரலஹ்சுமி வாராய் நீ விசாலாட்சி நீயே
உலகாளும் தாயே எனையாளும் தாயே
அம்மா.............................அம்மா......................
அம்மா...............................அம்மா....................

ஜய் ஜய் துர்க்கே ஜய் பவானி
சாம்பவி சங்கரி ஜய் பவானி
ஜய ஜெகதம்பே ஜய மாங்கல்யே
சாம்பவி சங்கரி ஜய் பவானி (ஜய்)

ஜய ஜெய ஜனனீ மகா காளியே
சாம்பவி சங்கரி ஜய் பவானி
அன்னை அபிராமி அருள் புரிவாய் - இந்த
அகிலமெல்லாம் சிறக்க வரம் தருவாய்
உன்னை வேண்டி மனம் உருகிநின்றோம்
உலகத்து நாயகியே எமைக்காப்பாய் (அன்னை)

உலகத்து நாயகியே அன்னையே நீ
உண்மை பக்தரது உறுதுணையே
இலை உன் அருளுக்கு இணையிங்கு
எல்லோர்கு மினியவளாள் இலங்கிடுவாய் (அன்னை)

மலையத்வ ராஜனவன் திருமகளாம் - அவள்
மண்ணுக்கும் விண்ணுக்கும் தேவி நீயே
பலகற்றும் பலகேட்டும் நின்னருளைப்
பாரில் பெறவிளைந்தோம் கருணை செய்வாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரஸ்வதி சரஸ்வதி செளபாக்ய தாயினி
சரஸ்வதி சரஸ்வதி சகலகலா வாணி
சரஸ்வதி சரஸ்வதி கலையெல்லாம் தருவாய்
சரஸ்வதி சரஸ்வதி நலமெல்லாம் அருள்வாய.

தஞ்சமென்றே வந்தேன் சரஸ்வதியே - எந்தன்
தாயே தருணம் வா சரஸ்வதியே
நெஞ்சமுருகிப் பாட சரஸ்வதியே
நாவிலே நர்த்தனம் செய் சரஸ்வதியே.

வெள்ளைத் தாமரை வாழும் சரஸ்வதியே - எந்தன்
உள்ளம் குழையப் பாட அருள் தருவாய்
கள்ளம் கபடொழித்துக் கொஞ்சித் தமிழில் தாயைக்
கண்டு களிக்கப் பாட்டுப் பாடவை அம்மா. ( - )

உமையவளே அருள் புரிவாயம்மா
ஓங்கார ரூபிணி அகிலாண்ட நாயகி ( )

நான் செய்த பிழைகளெல்லாம் பொறுப்பாயம்மா
நான் கேட்கும் வரங்களெல்லாம் தருவாயம்மா
ஜெகதம்பிகே சிவரஞ்சனி.

மங்கள ரூபிணி மதிவாணி சூலினி.............................
வாழ்வுமானவள் துர்க்கா வாக்குமானவள்......................

## துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபிணி மதியணி சூலினி பாணியளே
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும் சங்கரி செளந்தரியே
கங்கண பாணியன் கனிமுகங் கண்டநல் கற்பக காமினியே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்கநிவாரணி காமாஷி!

கானுறு மலரெனக் கதிர்ஒளி காட்டிக் காத்திட வந்திடுவாள்
தானுறு தவஒளி தாரொளி மதியொளி தாங்கியே வீசிடுவாய்
மானுறு விழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்!
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்கநிவாரணி காமாஷி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச் சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப் பொருந்திட வந்தவளே
எங்குலம் தழைத்திட் எழில்வடி வுடனே எழுந்தநல் துர்க்கையளே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்கநிவாரணி காமாஷி!

தண தண தந்தண தவிலொலி முழங்கிடத் தண்மணிநீ வருவாய்
கண கண கங்கண கதிர் ஒளிவீசிடக் கண்மணிநீ வருவாய்!
பண பண பம்பண பறையொலி கூவிடப் பண்மணிநீ வருவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்கநிவாரணி காமாஷி!

பஞ்சமி பைரவி புத்திரி பஞ்சநல் பாணியளே
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேலனைக் கொடுத்தநல் குமரியளே
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்தநற் சக்தியெனும் மாயே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்கநிவாரணி காமாஷி!

எண்ணியபடி நீயருளிட எங்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப் பல்கிட அருளிடுவாய்
கண்ணொளி யதனால் கருணையே காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்கநிவாரணி காமாஷி!

இடர்தரும் தொல்லை இனிமேல் இல்லையென்றுநீ சொல்லிடுவாய்
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச் சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து பலவினை ஓட்டிடுவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்கநிவாரணி காமாஷி!

ஜெய ஜெய பாலா சாமுண்டீஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய துர்க்கா ஸ்ரீபரமேஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய ஜெயந்தி மங்கள காளி ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெயசங்கரிகௌரி க்ருபாகரி துக்கநிவாரணி காமாஷி!

## ராகு கால துர்க்கா அஷ்டகம்

வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்கு மானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தவள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீக்கியே என்னை தாங்கும் துர்க்கையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

உலகை ஈன்றவள் துர்க்கா உரமயுமானவள்
உண்மையானவள் எந்தன் உயிரை காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்தை யானவள்
நிலவில் நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே (தேவி)

செம்மையானவள் துர்க்கா செபமும் மானவள்
அம்மையானவள் அன்பு தந்தை ஆனவள்
இம்மையானவள் துர்க்கா இம்பமானவள்
மும்மையானவள் என்றும் முழுமை துர்க்கையே (தேவி)

உயிருமானவள் துர்க்கா உடலுமானவள்
உலகமானவள் எந்தன் உடமையானவள்
பயிறுமானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே (தேவி)

துன்ப மற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துரை யுமானவள் இன்பத் தோணியானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே (தேவி)

குருவுமானவள் துர்க்கா குழந்தையானவள்
குலமுமானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவுமானவள் துர்க்கா திரிசூலி மாயவள்
திருநீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே (தேவி)

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னை தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயை வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னை காக்கும் துர்க்கையே (தேவி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னி துர்க்கையே இதய கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீரக் கனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே. (தேவி)

## சகலகலாவல்லி மாலை

வெண்டாமரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டான் னுறங்க வொழித்தான் பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறை தோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன் செந்
நாவு மகவும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங் காலு மன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கனல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய் நளி னாசனஞ் சேர்
செல்விக் கரிதன் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கும் முயிராமெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நின்கின்ற நின்னை நினைப்பவர்யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம் புயத் தாயே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரு மென்
பண்கண்ட ளவிற் பணியச் செய்வாய்
படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும்விளம்பி னுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.

## தேவி காமாட்சி சுமங்கலி

அரகர சங்கரி நாரிம னோகரி
ஆதிபு ராந்தக அம்பிகையே
முரகரி மாதவ சோதரி மாதவி
மோகவி லாசினி முக்கனியே
மரகத ரூபிணி மாதும னோன்மணி
மகபதி பாணிய வாணியளே!
ஜெயஜெய பங்கய குங்கும மஞ்சள்
இலங்குசு மங்கலி காமாட்சி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருள் எங்கணும் தேக்கிட மங்கலச்
சீரறம் செய்யன்ன பூரணியே
உருவருள் கொண்டுல குய்ந்திட மாதவன்
ஓம்பிடும் காஞ்சி யுமையவளே!
குருவருள் பொங்கிடக் குஞ்சித பாதமென்
கூப்பிய நெஞ்சினில் கோலிடுவாய்!
ஜெயஜெய பங்கய குங்கும மஞ்சள்
இலங்குசு மங்கலி காமாட்சி!

அருளுரு நெஞ்சினில் அம்புயக் கண்களில்
ஆட்சிபு ரிந்திடும் அன்னையளே
பொருளுறு புன்னகை பொங்கிட வந்தருள்
பூங்கணை ஏந்திய பொன்மகளே
மருவறு சேவடி வாழ்த்தி வணங்கிட
வல்லமை தந்தருள் வைணவியே
ஜெயஜெய பங்கய குங்கும மஞ்சள்
இலங்குசு மங்கலி காமாட்சி!

தனதன தந்தன தானன தந்தன
தாந்திடு தோமெனத் தாண்டவமே!
கனதனம் பம்பிடக் காற்சிலம் போங்கிடக்
காந்த கனன்றிடும் காளியளே
மனதெனும் மன்றில மர்ந்தனள் ஊக்கிடும்
மந்திர தந்திர மாமணியே
ஜெயஜெய மங்கலி குங்கும மஞ்சள்
இலங்குசு மங்கலி காமாட்சி!

செகமதில் காணுமெச் சந்நிதி யாயினும்
தேவியுன் ரூபமென் சிந்தனையே!
முகமதில் சந்திர பிம்பமெ னும்படி
மோகனப் புன்னகை பூப்பவளே
இகமதில் சாந்தியும் இல்லற மேன்மையும்
ஈந்திட வந்தருள் ஈகையளே!
ஜெயஜெய பங்கய குங்கும மஞ்சள்
இலங்குசு மங்கலி காமாட்சி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவி தோத்திரம்

வாழ்வும் ஆனவள் துர்க்கா வாக்கும் ஆனவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தனள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயு மானவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

உலகை யீன்றவள் துர்க்கா உமையு மானவள்
உண்மை யானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நினறவள் துர்க்கா நித்யை யானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

செம்மை யானவள் துர்க்கா ஜெயமு மானவள்
அம்மை யானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
இம்மை யானவள் துர்க்கா இன்ப மானவள்
மும்மை யானவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

உயிரு மானவள் துர்க்கா உடலு மானவள்
உலக மானவள் எந்தன் உடமை யானவள்
பயிருமானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

துன்ப மற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துறையு மானவள் இன்பத் தோணி யானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தாங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

குருவு மானவள் துர்க்கா குழந்தை ஆனவள்
குலமு மானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவு மானவள் துர்க்கா திரிசூலி யானவள்
திரு நீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயை வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

கன்னி துர்க்கையே இதயக் கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீர ககன துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

## சொந்தமான துர்க்கை அம்மா

கந்தவீர மாகாளி கமல மங்கலை
கருணையான கமல வடிவழகி கனிந்து நின்றனை
விந்தையாகி விளக்குமாகி விளங்கி வந்தனை
விண்ணுமாகி மண்ணுமாகி வெற்றி கண்டனை
மந்தமான புத்தியோட்டி மணமும் தந்தனை
மலரில்வேதன் உன்னைப்பாட மயக்கம் தீர்த்தனை
சொந்தமான துர்க்கையம்மா இந்த நாள்முதல்
எந்தனோடு வாழ்வழிக்க என்றும் தங்குவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தவீர மாகாளி நயன மாலினி
நம்பிவந்த எம்மிடையே நலனும் காட்டுவாய்
இந்தவாழ்வில் உன்னையன்றி இங்கு யாருளார்
இன்றுநல்ல காலைவந்து இனிமை கூட்டுவாய்
மந்தையாடு போலவாழ்வில் மயங்கி நில்லாமல்
முத்தியோடு செல்வபோகம் முழுதும் நாட்டுவாய்
சொந்தமான துர்க்கையம்மா இந்த நாள்முதல்
எந்தனோடு வாழ்வழிக்க என்றும் தங்குவாய்.

பொங்குவீர மாகாளி பொய்மை தீர்மணி
பொறுமையோடு பெருமையாகிப் பொருளும் கூட்டினாய்
எந்தையான சிவனைத்தூது எடுத்து அனுப்பினாய்
எழிலியாகி வண்ணமாகி என்னுள் ஆடினாய்
பந்தணைந்த விரலிநீயும் பகைமை என்றதும்
பறந்துவந்து படைகளோட்டிப் பசுமை காட்டினாய்
சொந்தமான துர்க்கையம்மா இந்த நாள்முதல்
எந்தனோடு வாழ்வழிக்க என்றும் தங்குவாய்.

விந்தைவீர மாகாளி விரைந்து வந்திடின்
சொந்தநோயும் வந்தநோயும் தொலைவில் ஓடிடும்
எந்தமாயம் எம்மைத்தேடி வந்த போதிலும்
என்னையீன்ற தாய்நினைப்பில் எரிந்து போய்விடும்
சிந்தைவாழும் உந்தன்மஞ்சள் சிறிது பூசிடின்
கந்தனோடு கரியன்நீல கண்டன் காணலாம்
சொந்தமான துர்க்கையம்மா இந்த நாள்முதல்
எந்தனோடு வாழ்வழிக்க என்றும் தங்குவாய்.

ஆதிசக்தி சோதிசக்தி ஆளவந்த சக்தியே
ஆகமங்கள் ஆனசக்தி ஆத்ம சோதி சக்தியே
நீதிசக்தி நித்தியசக்தி நீறுபூசும் சக்தியே
நீலிசக்தி நிருத்தசக்தி நீலமேனி சக்தியே
காதிசக்தி கானசக்தி காணுமின்ப சக்தியே
காளிசக்தி காயசக்தி காட்சிதந்த சக்தியே
வீரசக்தி தீரசக்தி வீடுகாக்கும் சக்தியே
சூரசக்தி சூலிசக்தி சூழுமச்சக்தி சக்தியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ துர்க்காதேவி அஷ்டகம்

(பண்:நாதநாமக்கிரியை)

பகவதி தேவி பர்வத தேவி
பலமிகு தேவி துர்க்கையளே
ஜெகமது யாவும் ஜெயஜெய வெனவே
சங்கரி யுன்னைப் பாடிடுமே
நஹநஹ தகதக பசபச வெனவே
தளித்திடு ஜோதி யானவளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா!

தண்டினி தேவி தக்ஷிணி தேவி
கட்கினி தேவி துர்க்கையளே
தந்தன தான தனதன தான
தாண்டவ நடன ஈஸ்வரியே
முண்டினி தேவி முனையொளி சூலி
முனிவர்கள் தேவி மணித்தீவி
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா!

காளினி நீயே காமினி நீயே
கார்த்திகை நீயே துர்க்கையளே
நீலினி நீயே நீதினி நீயே
நீர்நிதி நீயே நீர்ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே
மாதவி நீயே மான்விழியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா!

நாரணி மாயே நான்முகன் தாயே
நாகினி யாயே துர்க்கையளே
ஊரணி மாயே ஊற்று தாயே
ஊர்த்துவ யாயே ஊர்ஒளியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணி மாயே காருணி தாயே
கானக யாயே காசினியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா!

திருமக ளானாய் கலைமக ளானாய்
மலைமக ளானாய் துர்க்கையளே
பெருநிதி யானாய் பேரறி வானாய்
பெருவலி வானாய் பெண்மையளே
நறுமல ரானாய் நல்லவ ளானாய்
நந்தினி யானாய் நங்கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா!

வேதமும் நீயே வேதியள் நீயே
வேகமும் நீயே துர்க்கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே
நாணமும் நீயே நாயகியே
மாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாயவளே
ரோகநசி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா!

கோவுரை ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்க்கையளே
நாவுறை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சியளே
பூவுறை ஜோதி பூரண ஜோதி
பூதநற் ஜோதி பூரணையே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா!

ஜெயஜெய சைல புத்திரி பிரஹ்ம
சாரணி சந்த்ர கண்டினியே
ஜெயஜெய கூஷ்மாண் டினி ஸ்கந்த
மாதினி காத்யா யன்னையளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயஜெய கால ராத்திரி கெளரி
ஸித்திதா ஸ்ரீநவ துர்க்கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா!

## மஹாலட்சுமியைத் துதிப்போம்

உண்மையென் றுணர்த்தநெஞ்சில் ஓடிவந்து நிற்பவள்
நன்மைசெய்ப வர்களுக்கு ஞானதீபம் ஆனவள்
மென்மையான பண்பினோடு மேவும் அன்புக் காவியம்
பன்மைஒன்றும் பாங்கில்வந்த பாரில்அன்னை வாழ்கவே.

சொல்லடங்கி நின்றபோதில் தூய்மைத்தோற்றம் கொண்டவள்
பல்லுயிருக்குள் ஊறிநிற்கும் பாசமென்னும் தேசவள்
அல்லலுற்று அழைப்பவர்க்கே ஐயம்நீக்கு கின்றவள்
வல்லமைக்கோர் எல்லை என்னும்மாண்பின் அன்னை வாழ்கவே.

சோதனைகள் நூறுகோடி சூழவந்த போதினும்
நீதிஉண்மை தன்னில்ஒன்றி நின்றிருக்கும் திண்மயில்
ஜோதியாகத் தோற்றங்கொண்டு தோள்வலிக்குள் வாழ்பவள்
காதணிந்த சக்கரத்தின் கற்பின்அன்னை வாழ்கவே.

அர கரோ கரா - தாயே
அர கரோ கரா - தாயே
அன்னை துர்க்கை அம்பிகையே - அரகரோகரா
எம்மையாளும் ஈஸ்வரியே - அரகரோகரா
என்றும்இன்ப மானவளே - அரகரோகரா
அன்பர்களின் இரட்சகியே - அரகரோகரா
அவலவினை தீர்ப்பவளே - அரகரோகரா
தெல்லிநகர்ச் செல்வதியே - அரகரோகரா
தீனர்களின் தயாபரியே - அரகரோகரா
சங்கு சக்கர நாயகியே - அரகரோகரா
எங்கள் அன்னபூரணியே - அரகரோகரா
அரகரோகரா அரகரோகரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீமகிடாசுர மர்தினி ஸ்தோத்திரம்

அயிகிரி நந்தினி நந்தித மேதினி
விச்வ விநோதினி நந்தனுதே
கிரிவர விந்த்ய சிரோதி நிவாசினி
விஷ்ணு விலாசினி ஜிஷ்ணு துதெ
பகவதி ஹேசினி கண்ட குடும்பினி
பூரி குடும்பினி பூரிக் குதே
ஜய ஜய ஹே மஹிஷாசுர மர்தினி
ரம்யக பர்தினி சைல சுதே.

சுரவர வர்சினி துர்தர தர்ஷிணி
துர்முக மர்சிணி கர்சரதே
த்ரிபுவன போஷிணி சங்கர தோஷிணி
கில்பிஷ மோஷிணி கோஷரதே
தனுஜ நிரோஷிணி திதிசுத ரோஷிணி
துர்மத சோஷிணி சிந்து ரதே
ஜய ஜய ஹே மஹிஷாசுர மர்தினி
ரம்யக பர்தினி சைல சுதே.

அயிஜக தம்ப மதம்ப கதம்பவன
ப்ரிய வாஸினி ஹாஸர த
சிகரி சிரோமணி துங்க ஹாலய
ஜிருங்க நிஜாலய மத்யகதே
மதுமது ரேமது கைட பஞ்ஜினி
கைடப பஞ்ஜினி ராசரதே
ஜய ஜய ஹே மஹிஷாசுர மர்தினி
ரம்யக பர்தினி சைல சுதே.

கமல தலாமல கோமள காந்தி
கலாக விதாமல பாலலதே
சகல விலாச காலநில யக்ரம
கேலி சலத்கல கம்சகுலே
அலிகுல சம்குல சுவலய மண்டல
மௌலி மிலத்பகு லாலிகுலே
ஜய ஜய ஹே மஹிஷாசுர மர்தினி
ரம்யக பர்தினி சைல சுதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகல சத்கல ஹிந்து ஜலைரனு
ஸிஞ்சிறு தேகுண ரங்கபுவம்
பஜதி ஜகிம்ந சசீகுச கும்ப
தடீபர ரம்ப சுகாநுபவம்
தவசர ணம்சர ணம்சுர வாணி
நதாமர வாணி நிவாஸி சிவம்
ஜய ஜய ஹே மஹிஷாசுர மர்தினி
ரம்யக பர்தினி சைல சுதே.

## மகாலட்சுமியைத் துதிப்போம்

கமலமேவும் திருவே நின்மேல் காதலாகி நின்றேன்
குமரி நின்னை இங்கே பெற்றோர் கோடி இன்பமுற்றார்
அமரர் போல வாழ்வேன் என்மேல் அன்புகொள்வாயானால்
இமய வெற்பில் மோத நின்மேல் இசைகள்பாடி வாழ்வேன்.

செல்வமொட்டு மெய்தி நின்னாற்செம்மையேறி வாழ்வோன்
இல்லை என்றகொடுமை உலகில் இல்லையா வைப்பேன்
முல்லை போன்ற முறுவல் காட்டி மோகவாதை நீங்கி
எல்லையற்ற சுவையே எனைநீ என்றும் வாழவைப்பாய்.

வேண்டும் என்னும் வேட்கை தோன்றில் வேடிக்கைகள் செய்பவள்
பூண்டவெண்மை செம்மை தன்னில் பொய்மை மாய்ந்து நிற்பவள்
காண்டி என்று பெற்றமக்கள் காணக்காத்து நிற்பவள்
ஆண்டு கொள்ள இங்கு வந்தஆதி சக்தி வாழ்கவே.

பற்றுக்கொள்வதற்கு தன்னை பாலமாக்கிக் கொண்டவள்
முற்றி நின்ற நற்றவத்தின் மூலமாகி வந்தவள்
கற்றதொப்பை இல்லையென்று கண்ணில் காட்டி நின்றவள்
பெற்றயாவும் பெற்றுவந்த பேசும் அன்னை வாழ்கவே.

## அம்பாள் துதிப்பாடல்

அம்மா அம்மா என் தாயே
ஆறுதல் தந்தெம்மைக் காப்பாயே
இம்மா நிலத்தில் நீதானே
எங்கள் துர்க்கை தாய்தானே (அம்மா அம்மா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே நாம்படும் வேதனைகள்
எல்லாம் உனக்குத் தெரியாதோ
எல்லாம் நீயே அறிந்திருந்தும்
ஏனோ எம்மை வாட்டுகின்றாய் (அம்மா அம்மா)

எல்லாப் பிழையும் பொறுத்திடம்மா
தாயே எம்மைக் காத்திடம்மா
பொல்லாப் பெல்லாம் போக்கிடவே
புதுமை ஒன்றைச் செய்திடம்மா (அம்மா அம்மா)

அல்லும் பகலும் அழுகுரல்கள்
எல்லாத் திசையும் வேதனைகள்
பொல்லா வினைகள் சூழ்ந்தெம்மை
புழுவாய்த் துடிக்க வைக்குதம்மா (அம்மா அம்மா)

சொல்லால் வடிக்க முடியாத
துயரம் எனக்கு ஏனம்மா
எம்மால் தாங்க முடியாது
தாயே எம்மைக் காப்பாற்று (அம்மா அம்மா)

ஒன்றா இரண்டா நாம் சொல்ல
உள்ளத்து வேதனை தீராயோ
என்றும் உன்னை நாம் துதித்தும்
ஏனோ எம்மை வாட்டுகின்றாய் (அம்மா அம்மா)

நின்றால் நடந்தால் உன் நினைவு
எங்கும் எதிலும் உன் காட்சி
துன்பம் வராமல் காத்தெமக்கு
துணையாய் என்றும் வந்திடம்மா (அம்மா அம்மா)

"வருவாய் வருவாய் வருவாய் அம்மா
திருவே உருவாய் வருவாயம்மா
இருளை நீக்கிட வருவாயம்மா - உன்
அருளைப் பொழிந்திடு தாயே அம்மா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கல்யாணி கருமாரி காமாஷி நீயே
மகாலக்ஷ்மி மாதங்கி மீனாட்க்ஷி நீயே
வரலக்ஷ்மி வாராஹி விசாலாட்சி நீயே
உலகாளும் தாயே என்னையாளும் தாயே
அம்மா அம்மா அம்மா.

### ஆறு துணை

ஓம்சக்தி ஓம்சக்தி ஓம் - பராசக்தி
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி - ஓம்சக்தி
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்

கணபதி ராயன் - அவன்இரு
காலைப் பிடித்திடுவோம்
குணம்உயர்ந்திடவே - விடுதலை
கூடி மகிழ்ந்திடவே. (ஓம்சக்தி)1

சொல்லுக்கு அடங்காகவே - பராசக்தி
சூரத் தனங்கள் எல்லாம்
வல்லமை தந்திடுவாள் - பராசக்தி
வாழி என்றே துதிப்போம் (ஓம்சக்தி)2

வெற்றி வடிவேலன் - அவனுடை
வீரத்தினை புகழ்வோம்
சுற்றிநில் லாதே போ! பகையே!
துள்ளி வருகுது வேல் (ஓம்சக்தி)3

தாமரைப் பூவினிலே - சுருதியைத்
தனிஇருந்துரைப்பாள்
பூமணித் தாளினையே - கண்ணில்ஒற்றிப்
புண்ணியம் எய்திடுவோம் (ஓம்சக்தி)4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்புத் தலைமேலே - நடம்செயும்
பாதத்தினைப் புகழ்வோம்
மாம்பழ வாயினிலே - குழல் இசை
வண்மை புகழ்திடுவோம் (ஓம்சக்தி)5

செல்வத் திருமகளைத் திடங் கொண்டு
சிந்தனை செய்திடுவோம்
செல்வமெல் லாம்தருவாள் - நமதொளி
திக்கனைத் தும்பரவும் (ஓம்சக்தி)6

## நவராத்திரி பாட்டு

(மூன்றும் ஒன்றாகிய மூர்த்தி)

மாதா பராசக்தி வையம்எலாம் நீ நிறைந்தாய்
ஆதாரம் உன்னை அல்லாமல் ஆரெமக்குப் பாரினிலே
ஏதா யினும்வழிநீ சொல்வாய் எமது உயிரே!
வேதாவின் தாயே மிகப் பணிந்து வாழ்வோமே.

## வாணி

வாணி கலைத் தெய்வம் மணிவாக்கு உதவிடுவாள்
ஆணி முத்தைப் போலே அறிவுமுத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெலாம் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே.

## ஸ்ரீ தேவி

பொன்னரசி நாரணனார் தேவி புகழரசி
மின்னுநவ ரத்தினம்போல் மேனி அழகுடையாள்
அன்னையவள் வையம்எலாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிரு பொன்தாளே சரண்புகுந்து வாழ்வோமே.

## பார்வதி

மலையிலே தான் பிறந்தாள் சங்கரனை மாலையிட்டாள்
உலையிலே ஊதி உலகக் கனல்வளர்ப்பாள்
நிலையில் உயர்ந்திடுவாள் நேரே அவள் பாதம்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரஸ்வதி தேவியின் புகழ்

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத்திருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடி உணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின்று ஒளிர்வாள்
கள்ளம் அற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துள் பொருள் ஆவாள். (வெள்ளைத்)

மாதர் தீங்குரல் பாட்டில் இருப்பால்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடம் கொண்டாள்
கோதுஅ கன்ற தொழில் - உடைத்தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை உற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள். (வெள்ளைத்)

வஞ்சம் அற்ற தொழில் புரிந் துண்டு
வாழும் மாந்தர் குலதெய்வம் ஆவாள்
வெஞ்ச மர்க்குஉயி ராகிய கொல்லர்
வித்தை ஓர்ந்திடு சிற்பியர் தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகம் செய்வோம்
வீர மன்னர்பின் வேதியர் யாரும்
தஞ்சம் என்று வணங்கிடும் தெய்வம்
தரணி மீதுஅறி தெய்வம். (வெள்ளைத்)

தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்
தீமை காட்டி விலக்கிடும் தெய்வம்
உய்வம் என்ற கருத்துடை யோர்கள்
உயிரி னுக்குஉயிர் ஆகிய தெய்வம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வம் என்றொரு செய்கை எடுப்போம்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம் (வெள்ளைத்)

செந்த மிழ் மணி நாட்டிடை உள்ளீர்!
சேர்ந்து இத்தேவை வணங்குவம் வாரீர்!
வந்தனம் இவட்கே செய்வது என்றால்
வாழி அஃதுஇங்கு எளிதன்று கண்டீர்
மந்தி ரத்தை முணுமுணுத்து ஏட்டை
வரிசை யாக அடுக்கி அதன்மேல்
சந்த னத்தை மலரை இடுவோர்
சாத்தி ரம்இவள் பூசனை அன்றாம். (வெள்ளைத்)

வீடுதோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி
நாடுமுற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்கள் எங்கும் பலபல பள்ளி
தேடுகல்விஇ லாததொர் ஊரைத்
தீயினுக்கு இரையாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதம்என் அன்னை
கேண்மை கொள்ள வழிஇவை கண்டீர் (வெள்ளைத்)

ஊணர் தேசம் யவனர்தம் தேசம்
உதய ஞாயிற்று ஒளிபெறு நாடு
சேண்அ கன்றதோர் சிற்றடிச் சீனம்
செல்வப்பார சிகப்பழந் தேசம்
தோள்ந லத்த துருக்கம் மிசிரம்
சூழ்க டற்கப் புறத்தினில் இன்னும்
காணும் பற்பல நாட்டிடை எல்லாம்
கல்வித்தேவியின் ஒளிமிகுந்து ஓங்க (வெள்ளைத்)

ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரத நாட்டிடை வந்தீர்
ஊனம் இன்று பெரிது இழைக்கின்றீர்!
ஓங்கு கல்வி உழைப்பை மறந்தீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானம் அற்று விலங்குகள் ஒப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வெனலாமோ?
போன தற்கு வருந்துதல் வேண்டாம்
புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர் (வெள்ளை)

இன்ன றும்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்
பின்னர் உள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் (வெள்ளைத்)

நிதிமி குந்தவர் பொற்குவை தாரீர்
நிதிகு றைந்தவர் காசுகள் தாரீர்
அதுவும் அற்றவர் வாய்ச்சொல் அருளீர்
ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்
மதுரத் தேமொழி மாதர்கள் எல்லாம்
வாணி பூசைக்கு உரியன பேசீர்
எதுவும் நல்கி இங்கு எவ்வகை யானும்
இப்பெ ருந்தொழில் நாட்டுதும் வாரீர். (வெள்ளைத்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணாதிபன் அச்சகம் - கரணவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org